தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௦௧௦	மலர்
ருந	சித்தார்த்தி	அ
	கார்த்திகை	
	1979 நவம்பர் டிசம்பர்	

'தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்'

திருத்துறைக்கிழார்

இன்றைய அரசு (திரு. ம.கோ. இராமச்சந்திரன் தலைமையிலுள்ளது) திரு. ஈ. வெ. இராமசாமிப் பெரியாரின் நூற்றாண்டு விழாவை ஓராண்டாக, மாதந்தோறும் (17—9—1978 முதல் 17—9—1979 முடிய) ஒவ்வொரு மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடியது பாராட்டற்குரியதே.

அன்றியும் பெரியாரவர்கள் சொல்லிவந்த, விடுதலையேட்டில் பின்பற்றிவந்த, எழுத்துச் சீர்திருத்தத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வர ஆணைபிறப்பித்துக் கடைப்பிடித்து வருகிறது.

இதில் புதுமையென்னெனின்; பண்டு தமிழ்ப்பேரறிஞர் குழுக்கள் எழுத்துச் சீர்திருத்தம் செய்தன; இன்று அரசு செய்துள்ளது.

தமிழ் நலம் பேணும் தமிழ்மொழி வல்லுநர் பலரது வேண்டுகோளுக்கிணங்கி 'ஐ' யை 'அய்' என்றும் 'ஔ' வை 'அவ்' என்றும் மாற்றவில்லை யென்று அரசு அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

ஆனல், சிலர் அதனை எதிர்த்து ''அய்; அவ்'' என்று மாற்ற வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை விடுத்தும். எழுத்துச் சீர் திருத்த மாநாடு நடத்தித் தீர்மானம் நிறைவேற்றியனுப்பியும் கிளர்ச்சி செய்கின்றனர்; அவர்தம் ஏடுகளிலும் அம்முறையிலேயே எழுதியும் வருகின்றனர்.

தமிழ் எழுத்துகள் காலப்போக்கில் இயல்பாகவே மாற்றமுள்ளன வென்பது தமிழறிஞர் அறிந்ததே.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஓரளவு எழுத்துகள் செம்மைப்படுத்தப் பெற்றுச் செவ்வனே வழங்கி வருகின்றன; போலி மாற்றம் தேவையில்லை.

அங்ஙனம் மாற்றம் இன்றியமையாதது என்றால், தமிழ்ப்பற்றும்' தமிழ்மொழி வரலாற்றறிவும், பிறமொழிவன்மையும் உள்ள மொழிப் பேரறிஞர்களைக் கூட்டி ஆய்வு செய்து, அடிக்கடி மாற்றவியலாத நிலையான மாற்றத்தைச் செய்தல் வேண்டும்.

'கை' என்னும் எழுத்துக்கு முன்னொட்டாக 'ை' எனக்குறியிட்டெழுதியவர், ''ணை, லை, னை,'' என்னும் எழுத்துக்கு மட்டில் '?' போன்று கொக்கியிட்டெழுதுவதும், ணு, ரு, ணு, வுக்கு மட்டில் 'கா' வுக்குக் கால் 'ா' ஒட்டாமல் '◡' போன்று சுழியிடுவதும் ஏன் ? என்று ஆயுமிடத்து முற்காலத்தில் ஓலையில், எழுத்தாணியால், நூல்கள் எழுதவேண்டியிருந்தது. அச்சுப் பொறியும் இல்லை; ஆகையால், எழுத்தாணியால் ஓலையில் விரைவாகவும், எளிதாகவும் எழுதுவதற்காக கொக்கியும் சுழியும் இட்டு எழுதினர். (இதை எழுதுபவரும், பண்டு ஓலையில் எழுத்தாணியால் எழுதியவரே)

ஏன்? இன்றும் தூவலால் தாளில் எழுதும்போதும் அவ்வாறு எழுதுவதுதான் எளிதாயுள்ளது; விரைவாகவும் எழுதவியலுகிறது என்பதையும் நாம் அறிவோம்.

ஆங்கிலர் ஆட்சி இந்த நாட்டிற்கு வந்தபிறகுதான் அறிவியல் இந்த நாட்டில் பரவியது; அறிவியல் கண்ட கருவிகளெல்லாம் இந்த நாட்டிற்கு வந்தன. தொடர் வண்டி, உந்துவண்டி, மிதிவண்டி, வானூர்தி முதலியன வந்தன. அன்றுதான் அச்சிடும் கருவியும் வந்தது. அதன் பிறகுதான் நூல்களை அச்சேற்ற முற்பட்டோம்; செய்தியிதழ்கள் தொடங்கப்பட்டன.

அச்சுப்பொறியில் அச்சிட எல்லாவெழுத்துக்களுக்கும் முன்னொட்டு, பின்னொட்டு முறையைக் கையாள்வதால் எழுத்துக்களைக் குறைக்கலாம். அறிவுக்கும் பொருந்துவதே; தட்டச்சுப் பொறிக்கும் ஏற்றதாம்.

ஆனால் 'போலி' எழுத்துகள் என்று தமிழிலக்கணம் கூறுவனவற்றை ஏற்பது பொருத்தமன்று.

தட்டச்சுப் பொறியில் (Type-writing machine) எழுத்துப் பட்டடை (key-board) யைக் குறுக்கவேண்டும்; எழுத்துக்களைக் குறைக்கவேண்டும் என்று ஆராய முற்பட்ட சிலர் பல மாற்றங்களை

அறிவித்தனர். அரசு, பெரியார் நூற்றுண்டாகிய, இந்த 1979-இல் அவர் நினைவாக, அவர் விரும்பிய எழுத்துச் சீர்திருத்தத்தை வெளியிட்டுள்ளது.

தமிழ்ப்பற்றுள்ள தமிழறிஞர் சிலர், ''உயிரெழுத்துக்களை மாற்றிப்போலியாக்க வேண்டா; ஏனைய எழுத்துக்களைப் பெரியார் விருப்பப்படி திருத்தம் செய்யலாம்'' என்று கோரினர்; அரசு இணங்கியது; பாராட்டுகிறோம்.

உயிரெழுத்து 'ஔ' ஒரெழுத்தன்று 'ஒ' என்னும் எழுத்தும், 'ள' என்னும் எழுத்தும் சேர்ந்து ஆனது. 'ஒ' வையும் 'ள' வையுங் கொண்டு 'ஔ' அச்சிடலாம். அதற்கு, போலி 'அவ்' ஆகிய இரண்டெழுத்து தேவையேயில்லை.

ஆகவே, இடர்ப்பாடு 'ஐ' ஒன்றில்தானுளது. 'ஐ' உயிர்நெட்டெழுத்து மட்டுமன்று, இரண்டாம் வேற்றுமை உருபாகும். எனவே தமிழ்நலங் காக்கும் தமிழ்ப்பேரறிஞர் கோருகிறபடி 'ஐ' என்னும் ஒரெழுத்தை மாற்றுதிருப்பதால் யாருக்கும் எந்தக்கேடுமிராது.

தமிழில் 247 எழுத்துக்கள் என்று அறியார் சிலர் அறைகின்றனர். தொல்காப்பியம், நன்னூல் ஆகிய தமிழிலக்கியங்கள் கூறுகின்றபடி தமிழ் எழுத்துகள் முப்பத்தொன்றே.

உயிரெழுத்து 12; மெய்யெழுத்து 18; ஆய்தவெழுத்து 1; ஆக 31, உயிர்மெய்யெழுத்துக்கள் என்பவை எழுதுவதற்கு எளிதாக ஆக்கிக்கொள்ளப்பெற்றவையே.

ஆங்கிலத்தில் உயிரெழுத்துக்கள் 5; மெய்யெழுத்துக்கள் 21; ஆக 26; உயிர்மெய்யெழுத்துகள் ஆங்கிலத்தில் ஆக்கப்படவில்லை. ஆகையால், அறியார் சிலர் ஆங்கிலத்தில் பார், 26 எழுத்து; தமிழில் பார் 247 எழுத்து ! என்று பெருமிதமுறுகின்றனர். தமிழை இழிக்கின்றனர்.

தமிழில் 'நெடுஞ்செழியன்' என்று 7 எழுத்தில் எழுதுகிறோம், ஆங்கிலத்தில் 'Nedunchezhian' என்று 13 எழுத்தில் எழுதவேண்டியுள்ளது. உயிர்மெய்யெழுத்து ஆக்கப்பட்டமையால் 6 எழுத்து குறைவு.

உயிர்மெய் எழுத்தில்லாவிடில் 'நெடுஞ்செழியன்' என்பதை ''ந்எட்உஞ்ச்எழ்இய்அன்'' என்றுதான் எழுதநேரும். 12 எழுத்துகள். நீளம், நேரக்கேடு; விரைவாக எழுதவியலாமையுண்டாம்.

ஏனைய மொழிகளில் ஆங்கிலத்தைவிட மிகுதியான எழுத்துக்கள் உள.

தமிழறிஞர் எழுத எளிதாகயிருக்கவே உயிர்மெய்யை உண்டாக்கினர். 'ஐ' யை 'அய்' என்றும் 'ஔ'வை அவ் என்றும் போலிகளாக மாற்றவேண்டுமென்று "பிடிவாதம்" செய்பவர் அடையப்போகும் பயன்யாதோ ?

இப்பொழுது தமிழ்படிப்பவர்க்குக் குழப்பமும், வருங்காலத்தில் பண்டைய நூல்களைப் பயில்வார்க்கு இடர்ப்பாடுமே எஞ்சும். என்ன தமிழடா இது ? என வெறுப்படையச் செய்வதே பயனும்.

இன்று சிலர், "மறைமலையடிகள் தமிழ் ஒரு தமிழா ?" "பழந் தமிழ் நூல்களைப்படித்தால் கல்லையும் கடலையும் கலந்து கடிப்பது போல இருக்கிறது." என்று இயம்புகின்றனர். 'அவர்கள்' விரும்புவது கொச்சைத் தமிழே : கொலைத் தமிழே !

இன்றைய தமிழ் செம்மைப் படுத்தப்பெற்றது. ஆதலால் 'செந்தமிழ்' 'செம்மொழி' என அழைக்கின்றனர். இப்பொழுது கோரும் 'ஐ', 'ஔ' மாற்றம் 'சும்மை' மாற்றமே !

எழுத்துச்சீர்திருத்தம் இயற்கையாக ஏற்படவேண்டியதேயன்றி செயற்கையாக வலிந்து செய்யத்தக்கதன்று. அஃது மொழிச்சிதைவுக்கே வழிவகுக்கும்.

பலமொழிச்சொற்களையும் தமிழில் கலந்து எழுதிச் சிறுகச்சிறுகத் தமிழ்க்கொலை செய்து வருபவர்களே 'அய்', 'அவ்' என்று போலிகளாக்க வேண்டுமென்று அடம் பிடிப்பவரும் ஒட்டாரம் செய்பவருமாவர்.

தமிழ்மொழிப்பற்றும், தாய் மொழிப்பற்றும் உள்ள நல்லறிஞர் இம்மாற்றத்திற்கு இடந்தராதிருக்க தமிழக அரசை வலியுறுத்துவார்களாக. வாழிய செந்தமிழ் !

அறிஞர் கருத்து

ஓர் ஆற்று வெள்ளத்தைக் குறுக்கே அணையிட்டுத் தடுத்து நிறுத்தல் கூடாதாயினும், அதன் போக்கிலே சென்று பாழாகாதபடி கரைகோலி நேரிதிற் செலுத்திக் கண்வாய்களின் வழியே நீரைப் பாய்ச்சிப் புலன்களை விளைவித்தல் அறிவுடைமையாகும். அவ்வாறே மொழியினையும் சிலவரம்புகளுக்குட்பட்டு வளரும்படி செய்து மக்கட்குப் பயன் விளைத்தல் வேண்டும்.

நாவலர் பண்டித திரு. ந. மு. வேங்கடசாமிநாட்டார்

(த. பொ. துணர் ம்ள-பக்கம் 84)

கவிக் கூற்று

தெ. துரைசாமி, M. A.
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
தேசியக் கல்லூரி, திருச்சி-620001

[1]"கம்ப நாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கு இதயங்களியாதே" என்ற பாராட்டுரை, கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு முற்றிலும் பொருந்தும். உலகப்பெருங் கவிஞர்களில் தமக்கெனத் தனியிடம் பெற்றுள்ள கம்பர், தாம் படைத்துள்ள இராமாயணத்தில் தம்மை நேரடியாகவும், மறைமுகமாகவும் வெளிப்படுத்தியுள்ள திறனை ஓரளவிற்கு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம். எந்தவொரு கலைஞனின் படைப்பிலும் அவனுடைய சாயல் எவ்வாறேனும் வெளிப்பட்டுத் தோன்றும். கம்பரும் இதற்கு விதிவிலக்கல்லர். மொழி, நாடு, இனம் ஆகியவற்றில் அவருக்கு உண்டான பற்றினைப் பரக்கக் காணலாம். நன்றி மறவாத் தன்மையை அவர் எவ்வாறெல்லாம் வெளிப்படுத்துகிறார்? காப்பியத்தை நடாத்திச் செல்லும் முறையிலும் உணர்வு வயப்பட்டு மொழியும் முறையிலும், சொல்ல விரும்பும் கருத்துக்களை உணர்த்தும் வகையிலும் அவரை நாம் நன்றாக அறிந்து கொள்ளுகிறோம். இவ்வகையில் 'கவிக் கூற்று' நம்மை ஈர்த்துக் காப்பியத்தில் திளைக்கச் செய்யும் அழகினை நோக்குவாம்.

[2]"........நெறியில் புறம் செலாக்
கோசலம் புனை ஆற்றணி கூறுவாம்", என்று தொடங்கி

[3]"வசிட்டனே புனைந்தான் மௌலி" என்று முடிக்கும் வரை, இடையே அவர் நம்மை நோக்கிச் சுட்டிக் காட்டும் கருத்துக்களைச் [4] (செவிநுகர் கனிகள்) சுவைப்போம். கதை நிகழ்ச்சிகளைப் பின்னிப் பிணைத்துச் செல்லும் அழகினைக் கீழ்க்காணும் சொற்றொடர்களால் அறியலாம்.

[5]"கோதிலா, நாடு கூறினும் நகரம் கூறுவாம்"

[6]"சொன்ன அண்ணலுக்கு உற்றது சொல்லுவாம்"

[7]"மேல்நிகழ் பொருள் இனி விளம்புவாம் அரோ"

இவ்வாறு கதை நிகழ்ச்சிகளைச் சங்கிலி கோத்தாற்போல இணைத்துச் செல்கிறார்.

---

1 தனியன்-8; 2 பால-ஆற்று-1; 3 யுத்த-திருமுடி-16;
4 பால-நாட்டு-51; 5 பால-நாட்டு-61; 6 பால-மிதிலை 82;
7 பால-அரசு-50.

தமக்கு முன்னோடியாக விளங்கிய வான்மீக முனிவரை அவர் நினைந்து போற்றும் இடங்கள் பல, ஒரிடத்தை மட்டும் காண்போம்.

8''வாங்க அரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
தீம்கவி செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை அன்பு எனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்ருன் என்ன யான் மொழியலுற்றேன்''

கோசல நாட்டின் வளத்தை விளக்க முற்படும்போது, முன்னவர்க்குக் காட்டும் பணிவுதான் என்னே!

உழவர்கள் களைகளைக் களையாமல் உலாவிக்கொண்டு இருக்கிருர்கள். களைகள் உழத்தியரின் உறுப்புக்களை ஒத்திருக்கும்போது எவ்வாறு களைய மனம் வரும்? 9 ''பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்ருல்?'' என்ற வினவினையும் நம்மை நோக்கிக் கேட்கிருர்.

மெய்ஞானம் இல்லாதவரின் கல்வி காமத்தை வெல்லத் துணை புரிவதில்லை. இராவணனின் தகாக் காமமும் அவ்வாறே விளைந்தது இதனை ஒரு வினவிலே விளக்குகிருர்.

10''கற்றனர் ஞானமின்றேல் காமத்தைக் கடக்கலாமோ?''

காலந்தாழ்த்தி வந்த வருணன் மீது இராமபிரான் சீற்றம் கொண்டு கணைதொடுக்க முயலும்போது, வருணன் இறைஞ்சித் தன் நிலையினை விளக்கவே, அவன் வேண்டுகோட்படி அதனை மருகாந் தாரத்து அவுணர் மீது ஏவுகிருன். அறத்திலிருந்து வழுவாதார்கு விளைவது நலனே.

11''ஆய்வினை உடையராகி அறம் பிழையாதார்க்கு எல்லாம்
எய்வன நலனேயன்றி இறுதிவந்து இயைவதுண்டோ?''

கதை உறுப்பினர்களை வாயார வாழ்த்துகிருர்.

இராமபிரானை, 12 'எனையாள் வரதன்', 13 'முப்பரம் பொரு

8 பால-நாட்டு-1; 9 பால-நாட்டு-10; 10 ஆரணி-இராவணன் அணங்கு-84; 11 யுத்த வருணன் 17; 12 பால-அரசியல் 126;

ளிற்குள் முதலே'; 14 'நான்மறையின் கனி'; 15 'அறம் வளர்க்கும் கண்ணாளன்'; 16 'ஈறிலாப் புகழோன்'; 17 'கருணையின் நிலயம் அன்னான்'; என்றெல்லாம் புகழ்கிறார்

18'' பொற்பினுக்கு அணியினை, புகழின் சேக்கையைக்

கற்பினுக்கு அரசியை'' என்ற ஒரே பாடலில் சீதாதேவியை வாயாரப் புகழ்கின்றார்; அனுமனைத் 19 'தருமத்தின் தனிமை தீர்ப்பான்' என்றும், 20 'வாலியைச் சிறியன சிந்தியாதான்' என்றும், இந்திரசித்தினை 21'வீரத்தின் பன்மை தீர்ப்பான்'' என்றும் புகழ்வது போலக் கூனி என்னும் மந்தரையினைக் 22 'கொடுமனக்கூனி' என்றும், மனம் மாறுபட்ட கைகேயினைத் 23' தீயவை யாவையினும் சிறந்த தீயாள்' என்றும் இகழவும் தயங்கவில்லை.

இராமபிரானுக்கு இடர்புரிந்த கைகேயியை யாரென்று குகன் வினவிய பொழுது பரதனுக்கும் முற்பட்டுக் கவிஞரின் சீற்றம் பள்ளத்தில் பாயும் வெள்ளமென வெளிப்படுகிறது.

24'சுடு மயானத்திடைதன்துணை ஏக தோன்றல் துயர்க்
கடலின் ஏக

கடுமை ஆர் கானகத்துக் கருணை ஆர்கலி ஏக கழல்கால்
மாயன்

நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம் தன்
மனத்தே நினைந்து செய்யும்

கொடுமையால் அளந்தாள்'' இராமனிடம் கம்பர் கொண்டுள்ள ஈடுபாட்டின் எதிரொலியே இப்பாடல் எனலாம்.

கவிஞர் உணர்வு வயப்பட்டு மொழிந்த பிறிதொரு இடத்தை நோக்குவோம். தேவியைப் பிரிந்து நைந்துருகும் அறத்தின் நாயகத்திற்குச் சுக்கிரீவன் வானரர்கள் கண்டெடுத்த சீதையின் அணிகலன்களைக் காட்டித் துன்பத்தைப் போக்க விழைந்தான். அவை இராமனுக்குத் தந்த உணர்வினை எவ்வாறு எடுத்து இயம்புவது என்ற கவிஞரின் மனத்தடுமாற்றத்தினை

---

13 பால.கடிமண-68; 14 ஆரணி-சரவங்கள் 24; 15 யுத்த-இராவணன்-201; 16 யுத்த-மீட்சி-36; 17 யுத்த-அங்கதன்-2
18-ஆரணி-இராவணன் சூழ்ச்சி-26 19 கிட்கி-அனும-31;
20 கிட்கி-வாலி-125; 21 சுந்தர-பாச-13 22 அயோத்தி-மந்தரை-46; 23 அயோத்தி-கைகேயி-14; 24 அயோத்தி-கங்கைகாண்-68;

25''விட்ட பேர் உணர்வினை விளித்த என்கெனோ?
அட்டன உயிரை அவ் அணிகள் என்கெனோ?
கொட்டின சாந்து எனக் குளிர்ந்த என்கெனோ?
சுட்டன என்கெனோ? யாது சொல்லுகேன்?''

தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலை நன்றி மறவாமல் குறிப்பிடும் இடங்கள் பல. கடலில் அணை கட்டும் வேளையில், வானரர் மலைகளை எறிய ஒரு மலையினை நளன் தன் ஆற்றலினால் தாங்கினதைத் தஞ்சமென வந்தோர்களைச் சடையப்ப வள்ளல் தாங்கும் தன்மையோடு உவமித்துக் கூறுகிறார்.

26'' நளன், விஞ்சையில் தாங்கினன் சடையன்
வெண்ணெயில்

தஞ்சம் என்றோர்களைத் தாங்கும் தன்மை போல்''

27.........தியாகமா விநோதன் தெய்வப்
பொன்னி நாட்டு உவமை வைப்பைப் புலன் கொள
நோக்கிப்போனான்''

அனுமன் மருத்துமலையை நாடிச் செல்வதை விளக்கும் புலவர், சோழநாட்டையும், சிறப்புற ஆளும் சோழனையும் சிறப்பாகப்போற்றுகிறார்.

28''என்றுமுள தென்றமிழ் இயம்ப இசை கொண்டான்'' என்பதால் அவருடைய மொழிப்பற்றும், 29 'காவிரி கடுப்ப' என்பதால் நாட்டுப்பற்றும், 30 'புவியினுக்கு அணியாய்' என்ற பாடலால் சான்றோர் கவி மீது கொண்ட பற்றும், 31 'எனையாள் வரதன்' என்பதால் இறைப்பற்றும் நன்கு விளங்குவன.

கதைப் போக்கினைப் படிப்போர்க்கு முன்னரே குறிப்பாக விளக்கும் கவிக்கூற்றின் மாண்பினைக் காண்போம். இராமபிரானின் கன்னிப் போரில் தாடகை மண்ணில் சாய்கிறாள். இறுதியில் இராவணனின் வெற்றிக்கொடி மண்ணில் வீழப்போவதை முன்னரே அறிவித்துக்காட்டும் திக்குறிபோலக் கொள்ளவேண்டுமாம்.

32''படியிடை அற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை ஒத்தாள்''
உடன் பிறந்தே கொல்லும் நோயினை ஒத்தவள் சூர்ப்பணகை.

---

25 கிட்கி-கலன்காண்-7; 26 யுத்த-சேது-9; 27 யுத்த-மருத்து-58;
28 ஆரணி-அகத்தி-47; 29 யுத்த-ஒற்று-6: 30 ஆரணி-பஞ்சவடி-1
31 பால-அரசியல்-126; 32 பால-தாடகை-51

33 'தன்கிளைக்கு இறுதி காட்டுவாள்' என்று கவிஞர் வர்ணிக்கிருர். அதே போலப் பிறன்மனை நயந்த காரணத்தால் 34 அரக்கரென்னும், கான் சுட முளைத்த கனலி' என்று தேவியைக் குறிப்பிடுவதன் மூலம் விளக்குகிருர்.

'விரிப்பின் பெருகும், தொகுப்பின் எஞ்சும்' என்ற கூற்றிற்கேற்ப கம்பரின் தனிக்கூற்றின் ஆற்றலை இச்சிறு கட்டுரையின் மூலம் முற்ற இயம்ப ஒல்லுமோ? 'மூங்கையான் பேசலுற்ருல் என்ன நான் மொழியலுற்றேன்'.

'இன்' எனப்பெயரிய வேற்றுமைக்கிளவி'

ஏ. ஆதித்தன்,
மதுரைக்காமராசர் பல்கலைக் கழகம்

பெயர்ச் சொல்லுக்கும் வினைச்சொல்லுக்குமிடையே உள்ள பொருள் தொடர்பாகிய இலக்கண உறவே வேற்றுமை எனப்படும். இவ்வுறவு சில ஒட்டுக்களால் (வேற்றுமை உருபு) வேறுபடுத்திக் காட்டப் பெறுதலும் உண்டு. தொல்காப்பியர் ஐந்தாம் வேற்றுமை எனக்குறிக்கும் 'இன்' எனப் பெயரிய வேற்றுமையினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியர் வேற்றுமை உருபினை அடிப்படையாகக்கொண்டு ஐந்தாம் வேற்றுமை எனும் பாகுபாட்டை அமைத்தாரா இன்றேல் இலக்கண உறவினை அடிப்படையாகக் கொண்டு அமைத்தாரா என்பது ஆய்வுக்குரிய ஒன்ருகும்.

ஐந்தாகுவதே

''இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னுமதுவே (தொ. சொல்,75)

ஐந்தாம் வேற்றுமையின் உருபு 'இன் எனவும் அது' 'இதனின் இற்று' என்பதைப் புலப்படுத்தும் எனவும் தொல்காப்பியர் குறிக்கின்ருர். இவ்வுருபு பெரும்பான்மையும் ஒப்புப்பொருளில் செயலாற்றுகின்றது. உரையாசிரியர்கள் 'நீக்கம்', 'எல்லை', 'ஏது' ஆகிய பிற பொருட்களையும் இவ்வேற்றுமைப் பொருண்மையின

33 ஆரணி-சூர்ப்-4; 34 ஆரணி-சூர்ப்-51;

தாகக் குறிக்கின்றனர்.1 உரையாசிரியர்கள் கூற்றிற்குத் தொல்காப்பிய நூற்பாவே இடம் தருகின்றது. ஐந்தாம் வேற்றுமையின் பயனிலைப்பாடு தோன்றும் நிலைமையினை விளக்கும் வாயிலாக அவ்வேற்றுமையின் புறநிலை வழக்குகளை (external distribution) விளக்கும் நூற்பாவில்2 இருபத்திருள்கு புறநிலை வழக்குகள் ஒப்புப் பொருண்மையில் அமைகின்றன. ஏனையவை 'எல்லை', 'நீக்கம்' 'ஏது' ஆகிய பொருண்மையில் அமைகின்றன.

சங்ககால இலக்கியங்களில் 'இன்' பெரும்பான்மையும் 'ஒப்புப் பொருண்மையில்' தான் கையாளப்பட்டுள்ளது. தொல்காப்பியரும் 'இதனது இற்று இது' என இதற்குப் பொருள் வேற்றுமையாகத் தான் கொண்டுள்ளார் எனக் கருதலாம். தொல்காப்பிய மொழியில் 'இன்' உருபு 'உவமப்பொருவு' உறழ்பொருவு' (ஐப்போல, ஐ விட) என்ற இருநிலையிலும் கையாளப்பட்டு வந்திருக்கின்றது.

'இன்' உருபுப் பொருண்மைக்கு நிகரான 'ஐ(ப்) போல' என்பது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையினைக் காணலாம்.

தோய் மடல் சின்னூர் (ஐ) போல (நற்றிணை, 133)

'இன்' உருபு உணர்த்தும் பொருண்மையினை ஏன் நாம் தொல்காப்பியனார் கூறும் இரண்டாம் வேற்றுமையின் புறநிலை வழக்கில் கூறப்படும் 'ஒப்பு' (தந்தையை ஒக்கும்-தந்தையைப் போல இருக்கிருன்) என்னும் பிரிவில் சேர்க்கக் கூடாது? இதனை வேறுவகையாகவும் அமைத்துக் காட்டலாம்.

''காக்கை-இன் கரிது களம்பழம்''

''காக்கை-ஐ-விட கரியது களம்பழம்''

காக்கையின் கரியது என்ற தொடரில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு வருகின்றதெனவும், 'இன்' தனித்து வழங்கா உவமஉருபு எனவும் கொள்ளலாம். 'போல', 'விட' என்னும் உவமஉருபுகள் போல 'இன்' என்னும் வடிவம் தொல்காப்பியர் காலத்தில் வழங்கி வந்துள்ளது என்றும், இது சார்பு நிலையில் (தனித்து வழங்கா நிலையில்) இதனை ஒரு வேற்றுமையாகத் தொல்காப்பியர் கருதிவிட்டார் எனவும் கொள்ளலாம். (ஈண்டு மு. வரதராசனுர் கருத்து குறிப்பிடத்தக்கது).

அடுத்து உரையாசிரியர்கள் 'இன்' உருபு 'ஒப்புப்பொருள்' நீங்கலாகக் குறிக்கும் ஏனைய மூன்று பொருண்மையினைக் காணலாம்.

நீக்கம் :

நின்னின் விடா நிழற்போல் (கலித்தொகை, 61)

நாரை காலை (இல்) இருந்து மாலை சேர்க்கும்

(ஐங்குறுநூறு, 157)

எல்லை :

குமரியின் தெற்கு (புறநானூறு, 6)

(குமரியிலிருந்து தெற்கு)

'நீக்கம்' 'எல்லை' ஆகிய இருபொருண்மையினையும் ஏழாம் வேற்றுமை இடப்பொருண்மையில் சேர்த்துக் கொள்வதே தனிமாய் சித்து.

ஏது :

அருவிடரோ சிறுநெறி ஏறலின் வருந்தி (புறம், 135)

செல்யானை சீறி மிதித்தலால் (களவழி நாற்பது)

'ஏது'ப் பொருண்மையினை மூன்றும் வேற்றுமை 'அதனில் ஆதல்' என்ற பொருண்மையில் சேர்த்துக் கொள்ளலாம்.

நீக்கம், எல்லை, ஏது ஆகிய மூன்று பொருண்மையினைப் பிற் கால வளர்ச்சியாகக்கூடக் கருதலாம். எனவே தொல்காப்பியர் 'இன்' உருபுக்குக் கூறும் பொருண்மையும், உரையாசிரியர்கள் கூறும் பொருண்மையும் வெவ்வேறு வேற்றுமையின் புறநிலை வழக்கில் வரும் பொருண்மையதாய் அமைகின்றனவேயன்றி தனியொரு வேற்றுமைப் பொருண்மையதாக அமையவில்லை 3 இதனை நோக்கும்போது தொல்காப்பியர் உருபு காரணமாகவே ஐந்தாம் வேற்றுமை எனத் தனி ஒரு வேற்றுமை அமைத்துவிட்டார் எனக் கருதுதல் வேண்டியதுள்ளது.

குறிப்புக்கள்

1. தொல். சொல். தெய்வச்சிலையார் உரை — 75

2. தொல், சொல், தெய்வச்சிலையார் உரை — 76

3. ஐந்தாம் வேற்றுமை உருபாகக் கூறப்பெறும் 'இன்' என்பதன் உவம உருபாகக் கருதுதல் ஏற்புடைத்தாக அமைகின் றது. ஏனெனில் 'இன்' உருபிற்குச் சொல்லுருபாக '(ஐ)ப் போல' என்பதனைக் கருதும் போது சிற்சில சிக்கல்கள் ஏற்படுகின்றன.

முல்லைக்கலித்திறன்

இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ.
துணைப்பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

"கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்று குறிப்பிடப் பட்டலும், கல்லாதவர் இக்கலித்தொகைச் செய்திகளைக் கேட்டாலும், மிகவும் போற்றுவர். கலித்தொகை நடையினை நோக்கும் பொழுது சங்க நடையுடன் தொடர்புடைய நடையாக இருந்தாலும் நெகிழ்ந்த நடையாக உள்ளது. கலித்தொகை ஓவியங்களில் சிறுகதை, நெடுங்கதை, நாடகம் ஆகியவற்றின் காட்சிகளைக் காணலாம். முல்லைத் திணையை எடுத்துக்கொண்டால், பல்வகைச் செய்திகளையும் திறன்களையும் உணரலாம். முல்லைக்கலியில் பதினேழு பாடல்கள் உள்ளன இப்பாடல்களை இயற்றியவர் சோழன் நல்லுருத்திரன் ஆவர் எனக் குறிக்கப்பட்டுள்ளார். சில்வகைப் பாடல்களை ஆராயும் பொழுது பல்வகைத் திறன்கள் புலனாகின்றன.

ஆயரியல்பு :

ஆயர் பிடவம், காந்தள், காயா ஆகிய மலர்களைச் சூடிய கண்ணியை' யுடையவராய் விளங்கினர். ஏற்றுடன் போரிடுகின்ற இளைஞர் தங்களை அணிசெய்து கொண்டனர். மலர் சூடிய மைந்தர் வலிமைமிக்கவராய் விளங்கினர். ஏறு தழுவுகின்ற களத்துக்குச் செல்லுமுன், நீர்த்துறைத் தெய்வத்தையும், ஆலமரத்தின் கீழுறைகின்ற தெய்வத்தையும், மாமரத்தின் கீழ் விளங்கும் தெய்வத்தையும் பரவி வணங்குவர். இத்தகு தெய்வம் தொழுகின்ற காட்சியினைத்

> "துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்
> முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ"

என வரும் அடிகளால் சிறப்புற அறியலாம்.

ஆயர் மகளிர் :

இம்மகளிரின் பற்கள் முல்லைமுகை போலவும் மயிலிறகின் அடிப் பகுதியைப் போலவும் விளங்கின. அவர்கள் கண்களில் பொலிவும் மகிழ்ச்சியும் இருந்தன, அவர்கள் பேசுஞ் சொற்கள், இனிமைச் சொற்களாம். மழலை மொழிகளாம், பொன் மகரக் குழைகளைக் காதுகளில் அணிந்திருந்தனர். ஆய்ச்சியர் பரண்களில் அமர்ந்து

ஏறுதழுவும் காட்சிகளைக் கண்டனர். ஆய்ச்சியரின் எழிலோவியக் காட்சியினை,

''முல்லை முகையும் முருந்து நிரைத்தன்ன
பல்லர், பெருமழைக் கண்ணர், மடஞ்சேர்ந்த
சொல்லர், சுடரும் கனங் குழைக் காதினர்.''

எனவரும் அடிகளால் கற்றுணர்ந்து மகிழலாம்.

ஏற்றினம் :

பல்வகையான எருதுகள் களத்திற்கு வந்தன. வலிமையுடைய எருதுகளாகத் தோற்றமளித்தன. ஏறுகளின் ஆரவாரம் முகிலோசை போலவும் இடியோசை போலவும் விளங்கின. மதயானைகளின் தோற்றம், வலிமை ஆகியனவெல்லாம் தோற்றுப்போகும் அளவிற்கு எருதுகளின் வலிமையும் தோற்றமும் அமைந்திருந்தன. எருதுகளின் வண்ணத் தோற்றங்கள் பல்வகையனவாம். காரி மாட்டின் வண்ணம் கருமையே, ஆனால் கால்கள் வெண்மை நிறமாம். கால்கள். மலையிலிருந்து வீழ்கின்ற அருவிகளைப் போலத் தோற்றம் அளித்தன. இரவின் தொடக்கம், அங்கொன்றும் இங்கொன்று மாகச் செவ்வானத்தின் விண்மீன்கள் தோன்றத் தொடங்கின. அக்காட்சியின் நிறத்தைப் போல எருது தோற்றமளித்தது. மற்றுமொரு எருதின் கொம்புகள் இறைவன் சூடிய இளம்பிறை போலக் காட்சியளித்தன. பனைக்கொடியோன் பலராமனைப்போல விளங்கும் வெள்ளை எருதும், கரியமாலைப் போல விளங்கும் கரிய ஏறும், சிவபெருமான் செம்மேனி போலத் திகழும் சிவந்த ஏறும், செவ்வேள் முருகன் போல உள்ள சிவந்த ஏறும். இந்திரனைப் போலப் பலபுள்ளிகளைப் பெற்ற எருதும் பெருங்களத்திற்குத் திரண்டு வந்தன.

பல்வகை நிறக் காளைக் காட்சிகளைப்,

''பாலிற வண்ணன்போல் பழிதீர்ந்த வெள்ளையும்,''
''திருமறு மார்பன் போல் திறல் சான்ற காரியும்'',
''முக்கண்ணான் உருவேபோல் முரண்மிகு குராலும்''
''வேல் வல்லான் நிறனே போல் வெருவந்த சேயும்''
''அணங்குடை வச்சிரத்தோன் ஆயிரங் கண்ணேய்க்கும்''

என் அழகுறப் புராண உவமைகளுடன் சோழன்நல்லுருத்திரன் புனைந்துள்ளார்.

புராண உவமைகள் :

சங்க இலக்கியங்கள், உவமைகள் வழியே பற்பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. முல்லைக்கலியில் புராணச் செய்திகள் உவமைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன. அக்காலமக்கள் கடவுளர்களையும் புராணங்களையும் பற்றி நன்முறையில் அறிந்திருந்தனர் எனலாம். புராணச் செய்திகள் விரைவில் பரவிய காலம் கலித்தொகையின் காலம் எனக் கூறலாம். ஆயர் ஏறுகளைத் தழுவும் பொழுது, புராணச் செய்திகளை உவமைகளாகவும் செய்திகளாகவும் சோழன் நல்லுருத்திரன் சிறப்புடன் கூறியுள்ளார்.

காளைகளின் கொம்புகள் சிவனின் கணிச்சிப் படைபோலச் சிவப்பட்டன. இக்கணிச்சிப்படைச் செய்தியினைச்

''சீறரு முன்பினோன் கணிச்சிபோல் கோடுசீஇ ''

எனவரும் அடியில் கூறப்படுகிறது.

மறஞ்செறிந்த ஆயமகன் ஏற்றோடு தழுவிப் போரிட்டான். ஆற்றலுடைய எருது அவனைக் கொம்புகளால் குத்திக் குலைத்தது. இக்காட்சியினை நல்லுருத்திரன் மாபாரதக் கதையோடு பொருத்திக் காட்டுகிறார். பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றியிழுத்தான் துச்சாதனன். வீமசேனன் துச்சாதனனின் கொடுமையைக் கண்டு, அவன் நெஞ்சத்தைப் பிளந்து கொன்றான். வீமசேனனைப் போல விறுடன் எருது திகழ்ந்தது. துச்சாதனனைப் போல ஆயன் துடித்துக் கொண்டிருந்தான். இப்பாரதக்கதையை,

''அஞ்சீர் அசைஇயல் கூந்தற்கை நீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நோரார் நடுவண்தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்''

எனவரும் அடிகளில் கற்றுணரலாம்.

உலகங்கள் அழியும் காலத்தில் அனைத்துயிர்களும் அழிந்துவிடும். சிவபெருமான் இறுதியில் கூற்றுவனையும் கொன்றுவிடுவான். அக்கூற்றுவன் குடலைக் கூளிப்படைக்கு உணவாகக் கொடுப்பான். ஆற்றலுடைய காளையின் செயல், சிவபெருமானின் செயலென விளங்கியது. அழிந்துபடுகின்ற கூற்றுவனைப் போல ஆயமகன் இறுதிநிலைக்குப் போயினான். இக்கூற்றுவன் அழிந்து படுகின்ற செய்தியினைப்

"படாரணி யந்திப் பசுங்கட் கடவுள்
இடரிய ஏற்றெருமை நெஞ்சிடந் திட்டுக்
குடர்கூளிக்(கு) ஆர்த்துவான் போன்ம்"

எனவரும் அடிகளில் உய்த்துணரலாம்.

துரோணரைக் கொன்றவன் சிகண்டி என்பவன் ஆவான். தன் தந்தை இறந்ததை அறிந்து அச்சுவத்தாமன் வெகுண்டான். பகைவன் சிகண்டியைக் கொன்றான். சிகண்டியைப் போல ஆய மகன் இறந்து பட்டான். அச்சுவத்தாமனைப் போலக் களத்தில் எருது சினந்து நின்றது. ஆயனைக் கொன்றது. பாரதத்தில் வரும் பெருமையான கதையினைத்

"தாளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தோளில் திருகுவான் போன்ம்"

என வரும் அடிகளில் பயின்றுணரலாம்.

எருமை ஊர்தியுடையோன் கூற்றுவனின் நெஞ்சைப் பிளந்த வன் சிவபெருமான். இப்பெருமானைப் போல ஆயன் ஒருவன் ஆற்றலில் சிறந்து திகழ்ந்தான். காற்றைப் போல விரைந்து வந்த ஏற்றைத் தழுவி வருத்தினான். அதன்மேல் வெற்றியுடன் தோன்றி நின்றான். இச்சிவனைப் பற்றிய புராணத்தினைக் கலித்தொகையின் காலத்து மக்கள் அறிந்துள்ளனர் எனலாம்.

பகைவன் கஞ்சன் முதலியோர் ஏவிய கேசி எனப்படும் கூந்தல் குதிரையின் வாயைப் பிளந்து வென்றவன் கண்ணன். இக்கண்ணனைப் போல ஆயனொருவன் சிவந்த ஏற்றின் கொம்புகளைப் பற்றி தழுவித் தன் வெற்றியினை நிலைநாட்டினான். கண்ணனைப் போல ஆயன் வெற்றியுடன் போற்றப்பட்டான், கேசியரக்கனைப் போலச் சிவந்த எருது அழிந்துபட்டது. கேசியை வென்ற கேசவனின் கதையை நல்லுருத்திரன் காலத்து மக்கள் நன்கு அறிந்து போற்றினர்.

வெண்ணிலவினைப் பற்றிய பாம்பின் கதையினை நன்கு அறிந்திருந்தனர், இக்கதை, பிற்காலத்தில் சந்திரகிரகணம் என்று கூறினர். இக்கதையினையும் முல்லைக்கலியில் உவமைச் செய்தியாகக் கூறப்பட்டுள்ளது. வெள்ளைக்காளையை ஆயமகன் தழுவினான். அக்காளையானது பாய்ந்து சென்றது. வெள்ளைக்காளை, வெண்ணிலவு என விளங்கியது. ஆயன் பாம்பென விளங்கினான்.

இவ்வுவமையை மற்றொரு முறையில் மாற்றிக்கூறியுள்ளார். பால்நிறத்தைப் போல இருக்கும் வெள்ளைக்காளையை ஆயன் தழுவினன். அக்காளையோடு ஆயன் கடுமையாகப் போரிட்டான் அப்பொழுது இளங்காரிஎருது அவனைத்தொடர்ச்சியாகக் கொம்புகளால் தாக்கிக் கொண்டிருந்தது. இக்காட்சியை, நல்லுருத்திரன் வெண்ணிலவை விழுங்கும் பாம்பையும்' அப்பாம்பை மீட்கும் நீலவண்ணனும் கண்ணனையும் உவமை செய்து தெளிவு படுத்துகிறார், பால்திறம் போன்ற காளை வெண்ணிலவுக்கும், தழுவும் இளைஞன் பாம்புக்கும் வெள்ளைக்காளை நீலவண்ணனுக்கும் உவமை செய்த திறன் பாராட்டற்பாலதாம். இக்காட்சியினைப்

''பானிற வெள்ளை யெருத்தத்துப் பாய்ந்தானை
நோனுது குத்தும் இளங்காரித் தோற்றங்காண்
பான்மதி சேர்ந்த அரவினைக் கோள் விடுக்கும்
நீனிற வண்ணனும் போன்ம்''

என வரும் அடிகளில் கண்டுணரலாம்.

(தொடரும்)

கரந்தைப் புலவர் கல்லூரி
இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்
தொடக்கவிழா.

இளங்கோவடிகள் தமிழ்க்கழக 41-ஆம் ஆண்டுத் தொடக்க விழா திருவள்ளுவராண்டு 2010 ஆவணித்திங்கள் [29—8—79] புதன்கிழமை மாலை 5-00 மணியளவில் தமிழ்ப் பெருமன்றத்தில் நடைபெற்றது. அப்பொழுது கல்லூரி முதல்வர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள்.

''சங்க இலக்கியத்தில் அணிநலன்'' என்பது பற்றிச் சொற்பொழிவாற்ற வந்திருந்த விழாத் தலைவர், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் அஞ்சல்வழிக் கல்வி இயக்குநர் திருதுகு டாக்டர் தமிழண்ணல் அவர்களைப் பாராட்டித் தமிழண்ணல் அவர்கட்கு பெற்றோர் இட்ட பெயர் ''இராம பெரிய கருப்பன்'' என்பது. கருப்பன் என்பதைக் கரும்பு+அன் என்று பிரித்தால் கரும்பைப் போன்று இனிப்பவர் என்று பொருள்படும். அவர்தம் பெயருக்கேற்ப இனிமையய்ச்சங்க இலக்கியத்தில் அணிநலன் என்ற தலைப்பற்றி அருமையான சொற்பொழிவாற்றுவார்கள் என்று கூறி வரவேற்றார்கள்.

அடுத்துப் ''பாவேந்தரின் சமுதாயச் சிந்தனை'' என்பதைப் பற்றி அருமையான சொற்பொழிவாற்ற வந்திருக்கும் பேராசிரியர் வண்ணமுத்து அவர்கள் முத்துச் சொற்களால் பாவேந்தரின் படைப் புக்களைப் பற்றிப் படம் பிடித்துக் காட்டுவார்கள் என்று கூறி வரவேற்றார்கள்,

பின்னர்ச் சங்க இலக்கியத்தில் அணிநலன் என்பது பற்றிப் பேசிய விழாத் தலைவர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள், ஆங்கிலே யரால் ஆங்கிலமொழி பெருமை பெறுகிறது என்றும், ஆனால் தமிழ் மொழியால் தமிழர்கள் பெருமை பெறுகிறார்கள் என்றும் கூறித் தமிழ்மொழியின் சிறப்பினை முதற்கண் எடுத்துரைத்தார்கள். இக் காலத் தோன்றும் இலக்கியங்கள் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை எழுதிய ''மருமக்கள் வழி மான்மியம்'' போல அங்கதமாகத்தான் சமுதாயத்தைச் சாடவேண்டும் என்றும்; புதுக்கவிதைகளைப் போல காதல் வருத்தத்தை உணர்த்துபவைகளாகவே இருக்கக்கூடாது என்றும்,

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு''

என்று திருவள்ளுவர் குறிப்பிடுவதைப் போல இருக்க வேண்டும் என்றும் கூறினார்கள். மேலும்,

''விரிகதிர் பரப்பி உலக முழுதாண்ட.......
அந்தி வானத்து வெண்பிறை''

என்ற சிலப்பதிகாரப் பாடலில் இலக்கியச்சுவை இலக்கியத் தன்மை, இலக்கிய அழகு எவ்வாறெல்லாம் அமைந்திருக்கின்றன என்று காட்டி மாணவர் தம் சிந்தனை உணர்வைத் தூண்டினார்கள். மேலும் தலைவனின் வர வெண்ணிக் ''கருமரத்தால் செய்த கதவுபோலத் தலைவி காத்து நின்றதனைப் பல்வேறு பாடல்களின் மூலம் விளக்கிச் சுவைபடத் திறனாய்வு செய்து காட்டினார்கள்.

சங்க இலக்கியத்தைப் பற்றிச் சொல்லுமிடத்து 2000 ஆண்டு களுக்கு முந்தியவை என்பதற்காக மட்டும் நாம் சங்க இலக்கியங் களைப் போற்றவில்லை. அவை இன்றும் படிக்கச் சுவை தருவன என்றும், ஆங்கிலத்தில் ''The Humanisim of Literature'' என்று கூறுவதுபோல மனிதத் தன்மையை அளிப்பது சங்க இலக்கியமே யாகும் என்றும், உண்மையான அணிநலன்கள் அமைந்திருப்பது சங்க இலக்கியத்தில் தான் என்ற ஆர்வத்தை ஊட்டினார்கள்.

கலித்தொகையில் ''துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப் பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவு முரைத்தனரே...'' என்ற பாடலைக்கூறி, வேங்கை மரத்திலிருந்த தேன்கூட்டைக் கண்ட ஆண்யானை தேனீக்களை விரட்டிவிட்டு, அந்தப் பொன் போன்ற தேனிறாலைத் தன் துதிக்கையால் எடுத்துக் கவளமாகத் தன் காதலிக்கு ஊட்டுகின்ற காட்சியையும், நாட்டின் வளத்தையும், காதல் நிலையையும் கூறி இயல்பு நவிற்சி அணி அதன்கண் அமைந்திருப்பதை விளக்கினார்கள்.

மற்றும் ''தலையோர் நுங்கின் தீஞ்சேறு மிசைய'' என்ற புறநானூற்றுப் பாடலை எடுத்துக் கூறி அதில் உயர்வு நவிற்சியணி பயின்று வந்ததை நயம்பட எடுத்துக்காட்டி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்தார்கள். இறுதியாகச் சுவைதோன்றச் செய்வதால் ஒரு இலக்கியத்தை எத்தனை காலம் வேண்டுமானாலும் வாழவைக்கலாம்; மனித சமுதாயம் இருக்கும்வரை சுவையுடைய உறுப்புக்கள் அமையப்பெற்ற சங்க இலக்கியமும் வாழும் என்று கூறி முடித்தார்கள்.

''பாவேந்தரின் சமுதாயச் சிந்தனைகள்'' என்பதைப் பற்றிச் சொற்பொழிவாற்றிய பேராசிரியர் வண்ணமுத்து அவர்கள் தொட்ட இடமெல்லாம் மணக்கின்ற சந்தனம் போன்று பாவேந்தரின் பாடல்கள் தோறும் தமிழ்மணம் கமழ்கின்றது எனக்கூறிக்,

''கனியிடை ஏறிய சுளையும் ....

............தமிழை

என்னுயிர் என்பேன் கண்டீர்!'' — என்ற பாடலைப் போல இன்னும் பல பாடல்களைச் சான்று காட்டி விளக்கினார்கள்.

மேலும், தாழ்ந்து கிடக்கின்ற மக்கள் தன்மான உணர்வு பெற்று எழுந்தால்தான் உணர்வு, தாழ்வு நீங்கும் என உணர்ந்த பாவேந்தர் ;

''ஓடப்பரா யிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட் டாலோர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாரீ''

எனச் சமுதாயத்தில் பொதுத்தன்மை நிலவவேண்டிப் பாடினார் என்பதை எடுத்துக் கூறினார்கள்.

மேலும், ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டு எத்திப் பிழைப் போர்க்கு புத்திப் புகட்ட வேண்டும் என்றும், வேர்ப்பலாவாக இருக் கின்ற விதவைப் பெண்களை ஆடவர் விரும்பி மணந்துகொள்ள வேண்டும் என்றும், படித்தால் தான் பகுத்தறிவு வளரும் என்பதால் எப்படிக்கும் முதற்படியாய்த் தமிழ் படிக்கவேண்டும் என்றும், பாவேந்தர் பாடிய பாடல்களைச் சுட்டிக்காட்டி அருமையான சொற் பொழிவாற்றிச் சமுதாயச் சிந்தனைகளின் கருவூலமாகப் பாவேந் தரின் கவிதைகள் இருக்கின்றன என்று கூறி முடித்தார்கள், இறு தியாக இளங்கோவடிகள் தமிழ்க் கழக மாணவர் தலைவர் திரு. க. தமிழ்ச்செல்வன் நன்றி கூற விழா இனிது நிறைவுற்றது.

அபிராமி சமயம்

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை,

(துணர் 53, மலர் 1-3, பக்கம் 6-ன் தொடர்ச்சி)

சிவசக்தியின் மயமாய் இயற்கையாகப் பரிணமித்துமிளிரும் உல கினைப் பற்றிய உண்மையினை விளக்குவது மாயை யென்பதும் அஃது மித்தையெனப் பொருள்படுத்தி அதனை வெறுமனே வாதிப்பது வாதமல்ல என்பதை அறிவுறுத்துவது அபிராமி சமயம். சிவத்தைச் சார்ந்திருக்கும் அற்புதமாய ஆற்றலுக்குச் சக்தி அல்லது மாயை என்று பெயர், இச்சக்தி என்றும் மாறுபாடுடன் சலித்துக் கொண்டு உடல் உலகு முதலியவற்றை ஐவகைச் செயல்களால் இயங்கச் செய்யும். சிவமோ என்றும் விகாரமின்றி உயிர்களின் வினைப் பயன் களுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை உயிர்கள் நுகருமாறு வகுத்துக் காட்டி எவ்வுயிர்க்கும் பெருங்கருணைத் திறத்தினை அருளும் மாயா சக்தி, மக்களுக்கு போகத்தையும் வீடு பேற்றையும் அளிக்கும். போகம் வேண்டினூர்க்கு அதற்கேற்ற பிறப்பு இறப்புகளுக்கு ஆட் படும் பிறவிகளை அறிவுமயமாக இறைச்சக்தி அளிக்கின்றது. பிற வியைப் பிணியாகக் கருதினூர்க்கு அம்மை, பிணியாகக் காட்சி யளித்துப் பின்னர் பேதமைப் பிறவியின் தத்துவப் பிணிப்பினை யொழிக்கும் அருமருந்தாகவும் வயங்கி ஆட்கொள்ளும் இயல்புடையாள் 'பிணியே, பிணிக்கு மருந்தே'' (24) என விளித் தார் பட்டர். பிணியாய் நின்று சோதித்துப் பின்னர் துன்பப் பிணி யினைப் போக்கி இன்பத்துத் தத்துவத்தை மாருது அளித்து மருந் தாய் மிளிரும் அம்மையின் தன்மையினைப் புலப்படுத்தியது சிந்திக்கத் தக்கது. ஆட்டுவிக்கும் சக்தி, துன்பத்தை இன்பமாகக் கொள்ளும் தேர்ந்த திறனைத்தந்து பிறவாமல் இருக்க ஆண்டு கொள்ளும் ஆற்

தவியல்புடையதென்பது பெறப்படும். முத்தியினை நாடுபவர்க்கு அச்சக்தி பிழம்பின் பொருளைத் தெளியக் காண்பித்து சிவகதிக்கு வழிகாட்டி இலங்குகிறது. இதனையே 'அரும் பொருளே அருளே .. ..அழியா முத்தி ஆனந்தமே' எனப்பட்டர் சுட்டுவர். இவ்வண்ணம் வேண்டுதல் வேண்டாமை இலாத அபிராமி அம்மை, வேண்டியவர்க்கு வேண்டியதை வேண்டியாங்கு அளித்து எல்லாவற்றையும் நிகழ்த்தும் வல்லமையால் சக்தியாயும் சிவமாயும் ஒளிர்கின்றுள் என்பது அபிராமி சமயத்துச் சித்தாந்தம்.

அபிராமி சமயம் சீருடைய தத்துவநூல் கொள்கைகளுக்கும், தருக்க நெறிமுறைகளுக்கும் ஏற்ப இயற்கையாய் அமையப் பெற்றிருப்பது சிந்தனைக்குரிய சிறப்பாகும். மெய்ப்பொருள் மெய்ந்நெறி மெய்ப்பயன் எனும் மூவகையுண்மைகள் அபிராமி அந்தாதியில் இலைமறை காய்போல் பரவலாக இருக்கின்றதென்பது உற்றுநோக்குவார்க்குப் புலனாகும். மாற்றமனங்கழியநின்ற அம்மெய்ப்பொருளை அறிவின் எல்லைக்கு உட்படுத்திக் கூறுங்கால் அது உலகப் பொருள்கள் அனைத்திலும் தோய்ந்தும் தோயாமலும் எங்கணும் தானாய் நிற்கும், உலவா இன்பச் சுடருடைய ஆதிசக்தியாகும். இச்சக்தியால் அமைதற்குரிய உயர் நெறி மற்றீண்டுவாரா நெறியாகும்.

> "தங்குவர் கற்பகத் தாருவினீழலிற் றாயரின்றி
> மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
> பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
> கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே"-75

இப்பாட்டினைக் கண்ணூன்றிப் படித்து கருத்துக்களை திருத்தமாகத் தெளிந்து கொள்ளின உண்மை நிலை புலனாதல் கண்கூடு. சத்தியும் சிவமும் ஞாயிறும் ஒளியும் போன்று இயைந்து யாண்டும் பிரிப்பின்றியே நிற்றலை முதல்வியின் அருளே கண்ணாக அவனைக் காண்பவர் உணர்வர். இவ்வுண்மையினை, ஒன்றன் இருமை, இரண்டன் ஒருமை என்பனவாற்றால் ஒரோவழி உளங்கொள்க.

'சிவமெனும் பொருளும் ஆதி சக்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம்' என்பது சௌந்தரிய லகரி.

> "பைங்கொடியாளும் பரமனிருந்திடத்
> திண்ணடியாகத் திகழ் தருசோதியாம்
> விண்கொடியாகி விளங்கி வருதலாம்
> பெண் கொடியாக நடந்தது உலகே

என்பதும் திருமந்திரம்.

இறைவியின் திருவருளால் பெற வேண்டுவது 'தளர்வறியா மனம்' என்பதை (69) அபிராமி சமயம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இஃது, மெய்ந்நெறி தலைப்படுவதற்கு வழிகாட்ட வந்த பட்டரது மனத்தில் நின்று வெளிவருதலான்; அவரது அறிவுறுத்தப்பெறும் உபதேசப் பொருளாகப் பெருமை வாய்ந்து நிலவுவதென்பது ஒருவாறு தெளிவாகும். இஃது எளிதே அக மனத்தார்க்குப் பொருளாகும் வேதமாகிறது. அறிதற்குக் கருவியென விளங்கும் வேதமாவது சமய அறிவு உறையுள் என்பது மரபாகும்.

மனம் என்றும் மக்களிடத்தே இருப்பது. மனத்தால் ஆக்கப்பட்டவர் மக்களாவர். மனத்தினை முதற்கண் பெரிதும் முன்னியுணரல் வேண்டும். மனமடங்கி ஒருமையெய்துவது அருமைப் பாடாகும் மனமடங்கப் பெற்றார்க்கு இயற்கைச் சக்திகள் யாவும் அவர்வழி இனிது இயங்கி விளங்கும். மனத்தைப் பண்படுத்தும் முறையில் பயில்வோர் மெய்யறிவின் வாய்ப்பட்டு தம்மையும் உலகினையும் உணர்வார். அதுபோது யாம் எனும் ஏழ்மையினையும் தாமெனும் செல்வப் பொதுமையினையும் மனவிகாரத்திற்கு இடனின்றித் தெளிபடவே, அன்னார் மனமிறக்கும் நிலையினைக் கற்றுத் தேர்ச்சி பெறுவர். ஏனெனில் பொன்போன்ற மனம் நிலையின்மையால் வானரமாவதும் இயல்பு. எனவே மனத்தினைத் துணை கொண்டு, நான் யார்? உடலின்கண் உறைவது எது? காணும் உலகு எவ்வாறு உண்டாயது? அதனைப் படைத்தவர் யார்? அவருக்கும் நமக்கும் என்ன தொடர்பு? யாம் அவரைப் பிரிந்திருக்கும் உணர்ச்சி ஏற்படுவதால் நமக்கு உய்யும் வழி யாது? நான் அவராவது யாங்ஙனம்? என விசாரித்து ஆய்ந்து வாழும் வகையினை உணர்வது மக்களின் கடமையாகும். இக்கடமையுணர்வினை மலர்த்தி பரம்பொருள்பால் அடைந்து கூடும் வழியினைப் புகட்டுவது அபிராமி சமயமாகும். மற்றும் மக்கள் நிலையற்ற கருவி கரணங்களை யுடைத்தாயிருந்தும், உலகினையும் தன்னையும் அறிதற்கு ஓரளவு மானுட அறிவு போலி அறிவாகிப் பயன் படுமாறில்லை. ஆதலால் அப்போலி அறிவு மெய்யறிவாக மாறுவதற்கு தன்னையும் அனைத்தையும் தெய்வத் தன்மையெனும் உணர்வுகொண்டு மனத்தைப் பொறிவாயிலாகச் செலுத்தாது அருள்நோக்குடன் பழகுதல் வேண்டும். பிறப்பிலும் மிக்க இப்பயிற்சியைப் பயனுள்ள முயற்சியாக ஆக்குவது அபிராமி சமயமாகும்.

அபிராமி அருட்சமயம் சமயபேதமும் வாதமும் வேண்டாது சமய ஒழுக்கத்தினை நிலைநாட்டி மக்களைப் பெருநிலைக்கு அழைத்துச் செல்லும் இயற்கை நெறியினை யுடையது. இது வேதங்களுணவியன் பொருளைப் புகட்ட வல்லது. கடவுளறிவின்

அரிச்சுவடியாக விளங்கி கடவுளுணர்வையும் உறுதியையும், அடைக்கலப் புகலிடத்தையும் வலியுறுத்துவது. எனவே அபிராமி சமயம், மக்களை ஆத்ம விசாரணையில் இறங்கி ஈடு படும் வழியினைப் புகற்சியுடன் விரும்பச் செய்யும். இது சிறப்பாக, (Self-intrspection) விடைபகரும் நோக்கமுடையது, நான் எனும் எண்ணம் தோன்றுவதும் மறைவதும் ஆத்மாவினுள்ளேதான். அதனால் தன்னைத்தானே ஒருவன் துருவிப்பார்ப்பது இன்றியமையாத தாகும். இவ்வாறு துருவிச் செல்லுங்காலை, உடல், அறிவு, ஆசை என்பவை நான் அல்ல என்று உணர்ந்து கொள்ளலாம். அதுபோது ஒருவன் தன்னுடைய உண்மையான சுய நிலையினை அறியும் போதுதான் அவன் உண்மையாய ஞானத்தைப் பெற்றவனாக விளங்குகிறான்; மனத்திற்கு அப்பால் தமக்குள்ளேமறைந்து கிடக்கும் தெய்வீகப் பொருளை (the inner being of allof us) உணர்ந்து கொள்ளுகிறான்.

நான் எனும் எண்ணத்திற்குப் பதிலாக ஓர் மகத்தான மெய்ஞ் ஞான சித்தி அவனைப் பற்றிக் கொள்ளுவதால், மனத்திற்கு அப்பா லான எல்லையற்றதும் அழிவற்றதுமான ஒரு தெய்வசக்தி அவனைச் சூழ்ந்து நிற்கும். நுட்பமாய இச்சக்தியினை தியானப் பயிற்சியால் சிதற விடாது, பழக்கத்தால் சேமித்து வைப்பின் மனத்திலே ஒரு ஒரு புதுமையாய உணர்ச்சி தோன்றிடவே, அற்புதப் பேரொளி ததும்பித் தவழும் மெய்ப்பொருளுடன் ஒன்றித்து விடும் இனிய இன்பம் பாயும். இதனை உற்றோரே ஆத்ம அனுபூதி அடைந்தவ ராவர். எனவே ஆத்மானுபூதி அடைந்தவர், தன்னை அறியாமலே அழிவில்லாத ஆனந்தத்தையும் ஞான அனுபூதியையும் ஒருங்கே பெறுவர். இதனை ஒவ்வொருவரும் தனக்குத்தானே உணர்ந்து கொள்ளவேண்டிய உண்மையாகும். 'நின்னைக்காணு மாந்தர்தம்மை யுங் காணாத் தன்மையர்' என்பர் பட்டினத்தடிகள், எனவே நான் எனும் நினைவைத் துறக்கச் செய்யும் சாதனைகளை விளக்குவதும் சமயத்தின் குறிக்கோள் என்பதும் பெற்றாம்.

அபிராமி சமயம் இன்ப ஆக்கத்திற்கும் துன்ப நீக்கத்திற்கும் அத்வைத முடிபினை அடையஉளவு கூறும் சிறப்பியல்பினையுடையது. ஒருவர் தான் ஆன்மா என்ற உணர்வினைப் பெறும்போது அன்ன வருக்கு அத்வைத ஞானம் உதயமாகிறது. இதனைப் பெறுதற் பொருட்டு துவைத சம்பந்தமான ஞான சாதனங்களைப் பழகி, இறைவிபால் நெருங்கிய உறவினை, தெளிவுணர்வால் தூயதாக ஆக்கிக் கொண்டு, நிலைநாட்ட முற்படல் வேண்டும். தூய உறவு இறைவிபால் பூரணமாக நிலைபெற்றவுடன், துவைதம் மறைந்து விட, நான் என்பதும் மறையும். இப்பெற்றினையுடையார் இறைவி யின் கழல் அணைந்து மீளார் என்பது தேற்றம்.

(தொடரும்)

கான்சாயபு சண்டை

சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ; எம். பில்.
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி

(துணர். 53, மலர் 5 6 7, பக்கம் 98-ன் தொடர்ச்சி)

வெள்ளைப்படையினை இவ்விதம் சிதறடித்த கானனை அவனது தளபதி தானப்ப நாயக்கன் நிதானப்படுத்தி 'தும்பூரு' கோட்டைக். கழைக்கிருன். அங்குள்ள கானின் நண்பன் ''சேகுருன் பாபா''வை பத்திரப்படுத்துவதற்காக கானனும் செல்கின்ருன், செல்லுமுன் ' ரத்தக்கவுல்'' வீசும் தன் கத்தியை கானன் ''மடப்புரத்துக் கால் வாயில்'' கழுவி ''உறையிலிட்டுச்'' சென்றதாகப் பாடல் காட்டுகி றது.

12:02 வாதலூரில் வந்த சண்டை :

''திசை மதுரை கோட்டை விட்டு வடக்கு முகம் நோக்கி தும்பூரு கோட்டைக்குள்'' சென்று தன் நண்பன் சேகுருன் பாபாவினைப் பத்திரப்படுத்தும் கான், விடிந்தவுடன் ''திருவாதவூர்'' மைதானந் தாண்டி'' வெள்ளைப்படை ''தும்பூரு காட்டினுள் நுழைந்து வருகை யில்'' வெள்ளைப்படையோடு படையாக தன்படைகளைக் கலக்கினுன். பீரங்கிகளும் துப்பாக்கிகளும் வெள்ளைப் படையினரால் பொரிந்து தள்ளப்பட்டாலும், கான் ஒரு பகல் முழுக்க, தன் சிறு படையோடு அப்பெரும் வெள்ளைப்படையினை எதிர்த்துக் கலக்கியதை

''அப்போ —சேரு கான் பகல் முழுதுக் எதிர்த்துப் போராடி''
சாயங்காலம் யோசனைகள் செய்து — இருந்தால்
தப்பாமல் தலையறுப்பான் பிரட்டன் என்று சொல்லி''

கோட்டை வாயிலில் எதிர்ப்பட்ட '' ஐந்து கும்பினி சிப்பாயிகளை'' அதஞ்செய்து மதுரை திரும்பியதாகக் குறிக்கிறது.

12:03 பிரட்டனின் பாராட்டும் மதுரை முற்றுகையும் :

திருவாதவூரில் கானல் நிலைகலங்கப் பெற்ற பிரெஸ்டன் கானை தான் வளர்த்த பிள்ளையாயினும், தன்னையே நிலைகுலையச் செய்து விட்ட திறத்தினைக் கண்டு

''வேலிக்கு நான் வைத்த முள்ளு — இதிலே
காலுக்குப் பகையாக வந்ததென்று சொல்லி

ஆண்பிள்ளை கான்சாய்பு நீலன் — என்று
அரசர் புகழ் பிரெட்டனுஞ் சந்தோசப்பட்டு ''

கானனே ''ஆண்பிள்ளை.' எனப் புகழ்கின்றான். பின் மதுரை நோக்கி படைதிருப்பி முற்றுகையிட முனைகிறான். மதுரைக்குத் தென்கிழக்கில் வண்டியூர்த் தெப்பக்குளக்கரையில் 1600 சிப்பாய்கள், டிராகன்ஸ் (Dragons) என்னும் பட்டாள வகையுள் ஜெர்மன் பட்டாலியன் 2,200 கருங்குதிரைகள், வெடி மருந்துகள், ரேக்லாக்கள், பீரங்கிகள் இவற்றோடு வந்து சேர்ந்த வெள்ளைப்படை அயர்வு கொண்ட நிலையில் இருக்கும் போதே கான் கோட்டையின்றும் வெளிவந்து

''கையினில் ரெண்டு முக்கப்பட்டாவை யெடுத்து
வீசினான் பாளையத்தில் விழுந்து''

வந்த வெள்ளைப்படை பிரெஸ்டனின் தலைமையில் புறப்பட்ட படைகளுள் முதல் பிரிவர்கும். (Regiment) இதனை காப்டன் 'டொனல்ட் கேம்பல்' என்பான் தலைமையேற்று நடத்தி வந்தான். இவன் கானின் நெருங்கிய நண்பனாக இருந்தவன். எதிர்ப்பு முனைப்பில் கானனின் வீரர்களின் குண்டு வீச்சிற்கு இலக்காகி கேம்பலின் துணைவன் ''சாமுவேல் ஸ்டிவன்சன்'' இறந்தான். கானனோ வெறி கொண்டு

''வீரியமாய் துப்பாக்கி குண்டுக்கு அஞ்சாமல்
துப்பாக்கி எடுப்பதற்குள்ளே — பாதர்
சொல்லி சொல்லி மாட்டுறான் திசை மதுரை கானன்
பீரங்கி திருப்புதற்குள்ளே — அங்கே
புலிபோல வீசுறான் பொல்லாத கானன்
சந்திரிக்காயறுத் தெரிந்தாப்போலே — அப்போ
கண்டபடி வீசினான் கான்சாய்பு நீலன்''
பனங்காட்டு மைதான மெல்லாம் அப்போ பனங்காய் போல்
உருளுது சிப்பாய் தலைகள்''
''ஓடுதே வெள்ளைப்பட்டாளமெல்லாம் அப்போ
உத்தமன் கான்சாய்பு துரத்தியடித்தான்''

என கானின் போராட்டத்தினைப் பாடல் புகல்கின்றது.

12:04 நட்டோர்க்குத் தோற்றலில் நாணுதோன் கான்

இந்நிலையில் காப்டன் டொனல்ட் கேம்பர் படுகாயமடைந்து வீழ்ந்து விடுகிறன்.

வெறிகொண்டு போராடிய கான் தன் பழைய நண்பனை அவல நிலையில் கண்டு மனம் வெதும்பி, அவனை மடியில் தூக்கி வைத்துக் கண்ணீர் விட்டு அரற்றியதை ராபர்ட் ஓர்ம், அம்போல்ட் லூசிங்கன் என்போர் டைரியில் குறித்துள்ளனர்

கானே காம்பலை உபசரித்ததைக் கண்டு படையின் வெற்றி முகத்தில் இருந்து கானின் துணைப்படை பிரெஞ்சினரும் பகை வணுகிய கேம்பலிடத்தில் மிக்க அன்புடன் நடந்து கொண்டனர். போர்க்களத்திலும் நட்பு பாராட்டி தன் முழுவெற்றியினையும் பொருட்படுத்தாத அருமை அன்பன் கானை பின்னர் டொனல்ட் கேம்பல் எந்நிலையிலும், கானின் இறுதி வரையிலும் நேரிடையாக எதிர்க்கவே இல்லை.

12:05 நேருக்கு நேர் :

காப்டன் காம்பலைத் தொடர்ந்து வந்த பிரட்டன் ''தொடர்ந்து வந்த பிரட்டன் ''தெப்பைக்குளம் வெளிக்குத் தெற்காக'' கி. பி. 1764 ஜனவரி 5-ல் வந்து தங்கினன். பிரட்டனின் வருகை கேட்ட கான் தன் கோட்டைச் சுவரிலிருந்து பீரங்கிகளை இயக்குகின்ருன். வெகுண்டெழுந்த பிரட்டன் ஒன்பது வெங்கல பீரங்கிகளை ஒன்ருக மதுரை நோக்கித்திருப்பிக் குண்டு வீசுகிறன்.

கான் வீசிய குண்டுகள் தெப்பக்குளத்தையே நிறைக்கும் அள விற்கு வீசப்பட்டதாக இப்பாடல்

''கானனே திருப்பிய பீரங்கி — அங்கே
கணக்கில்லை தெற்யைக் குளங் கொள்ளவில்லை குண்டு''

என்கிறது.

''மானங் கவிந்திட்டாப் போலே'' வரும் பிரட்டனின் பீரங்கித் தாக்குதலால் ''கிழக்கு முகக்கொத்தளந்தனில் ஒரு குறுக்கு மூலை கோட்டை'' பிரட்டனல் பிடிக்கப்பட்டது.

''பகலெல்லாம் பிரட்டனிடிப்பானும் — கானன்
ராத்திரி முப்பதுக்குள் கட்டி முடிப்பானும்''

இந்த முற்றுகை ஒரு மாதம் நீடித்தது. இதனை

"இடிக்கவே எடுத்துக்கட்டி — கானன்
இருந்து சமாளித்தான் ஒரு மாதம் வரைக்கும்"

எனும் பாடற்பகுதி விளக்கும்.

12:06 அசுரப்போர் — வெள்ளைப்போர் :

கானை பகலில் வெல்லமுடியாது என்பதனை ஒருமாதம் போராடி உணர்ந்த பிரட்டன்

"இப்படியோ கானு தைரியந்தான் — நல்ல
தென்று சொல்லி ராத்திரியில் கள்ளச் சண்டை செய்தான்"

எந்த விதமான அரவமுமின்றி ஏழு பட்டாளத்தையும், பண்டியில் ஏழு ரேக்லா பீரங்கிகளையும் கொண்டு இரவு பன்னிரண்டு மணியளவில் மதிலோரம் வந்து 'பீரங்கிகளை' முழக்கிக்கோட்டைச் சுவர்களைத் தாக்கலானன்.

அசுரனைப் போன்ற வலிமை படைத்த கான் நிலைமையை உடனறிந்து. "ஆயுதந்தனை உருவிக்கொண்டு" "ஆண்பிள்ளை கைகலந்தான் வண்டியூர் வெளியில்" அந்த இரவில்

"வீசினன் பொல்லாத கானன் — அப்போ
விழுகுதே சிப்பாய் தலைகளொரு நூறு"

இது கண்டு பெரிய பிரட்டன் 'சோல்டேம்' (சோல்ஜர்ஸ் எய்ம்) என்று கத்தினன். பீரங்கிகளும், மூவாயிரம் துப்பாக்கிகளும் குண்டுமாரி பொழிந்தன. அஞ்சா நெஞ்சன் கான் மூன்றே குதிரைகளுடன் கும்பினியாரில் " ஐந்து கும்பினி சனத்தைக் கொன்று கோட்டைக்குத் திரும்பினன்.

12:07 பிரட்டனுடன் நவாப்பும் :

பிரிட்டன் கானை எதிர்க்க மேலும் துணை வேண்டி "காயிதமெழுத" நவாப்பு உடன் "முப்பது பட்டாளஞ் சனமும் மூணாரிஜிமண்டு ஜமேதார் மாரும், வெடிகுண்டு புகைகுண்டு, பீரங்கி ரேக்லா முப்பது, மருந்துப்பெட்டி. சாராயப்பீப்பாய்கள் இவற்றுடன், விருலிமலை வழியாக துவரங்குறிச்சியில் தங்கி "நத்தத்தை ஆண்ட

லிங்கையன்'', 'நம்மன் குறிஞ்சிப்பூச்சேனே', கருங்குளத்து கம்மை நாயக்கன், முள்ளிப்பட்டி முத்தப்ப நாய்க்கன், தோகைமலை பசுவப்ப நாய்க்கன், மாம்பூண்டி லெக்கை நாய்க்கன்'', இவர்களை யெல்லாம் படையுதவ ஆணை செய்து, மதுரை நோக்கி கானல், முசியார், சின்ன பிரட்டன் என நூல் கூறும் கேனல், மோஸஸ், பிரெஸ்டன் (கானனே வளர்த்த, தெப்பக்குளத்தருகில் கானனே எதிர்த்த பிரெஸ்டன் அல்ல) என்ற வெள்ளைத்தளபதிகளுடன் தன் துலுக்கப்பட்டாளமும் சூழ 'தேனூர் அடைந்து'பாளையமிரங்கினுன்.

இதனை ஒற்றறிந்த கான் மிகஅலட்சியமாகத் தன்நண்பர்களிடம்

''தேனூரில் மம்முதலி தந்தான் — நானும்
சீக்கிரத்தில் ருத்திரிக்கு பேட்டி பண்ணி வாரேன்''

எனத் தான் போரிட்டு வீழ்த்தி வரப்போவதை ''பேட்டிபண்ணிவரப் போவதாக''க் கூறும் இக்கதைப்பாட்டால் கானின்வீரம் தெற்றென விளக்கப்படுகின்றது.

12:8 அலறினுன் ஆற்காட்டு நவாப் :

எழுநூறு குதிரைப்படை வீரர்களோடு இரவோடிரவாக வந்த கான்

''ஒரு மூச்சுக்குள்ளே பாய்ந்து பாளையத்தில் விழுந்து'' வெட்டி வீழ்த்தினுன் வெள்ளைப்பட்டாளத்தை கானின் பெருவீரத்தையும், அஞ்சாத பேராற்றலையும்'' ......மம் முதலீ கண்ணுலே கண்டு (மகமத் அலி)

''கால் பதறி மோசம் வந்ததென்று — அப்போ
கனமான மம் முதலி மூர்ச்சையாய் விழுந்தார்''

மயக்கமுற்ற நவாப் ''தும்பூரு'' கோட்டைக்குள் எடுத்துச் செல்லப் பட்டான்.

வெள்ளையர் அணிஅணியாய் நின்று கானுடன் போராடுகின் றனர். கானனே அஞ்சினுனில்லை,

12:9 ''அஞ்சா நெஞ்சன்'' கான் :

துப்பாக்கிகளும் பீரங்கிகளும் குண்டு மாரி பொழிகின்றன. கானே

நோக்கி. ஆனாலும்

"அத்தனை குண்டிலே கானன் — பாய்ந்து
அஞ்சாது வெட்டினான் பொல்லாத கானன்"

"பொல்லாத" எனக் கூறுசின்ற கதைகாரன் கிராமீய முறையில் "மிகுந்த சிறப்பினை" இப்பொல்லாத எனுந் தொடபால் விளக்கு கின்றான். நவாப்பின் பாளையத்தில் பெரும் இழப்பினை உண்டு பண்ணிய பின் கான் தன் மதுரைக்குத் திரும்புகிறான்

12:10 இருதலைக்கொள்ளி எறும்பின் வெற்றி :

மதுரைக்கு திரும்பும் கானை பசுமலைக்கருகே பெரிய பிரட்டன் (பிரஸ்டன்) எதிர்க்கிறான். முன்னும் பின்னும் பெரிய பெரிய பிரட்டனும், நவாப்பும் தன்னை அழிக்க முனைந்தபோதும் ஆயிரமாயிரம் குண்டுகட்கும் அஞ்சாது கான் போராடுகின்றான். கானும் தன் பீரங்கிகளைக் கொண்டு எதிர்த் தாக்குதல் செய்கிறான். அதில் பன்னிரெண்டு வெள்ளையர்கள் உயிரிழக்கின்றனர். இருமுனை எதிர்ப் புகளையும் கலங்க அடித்த கான் மதுரைக் கோட்டைக்குள் சென்று விடுகின்றான்.

12:11 ஆட்டுக்கிடாய் வேண்டுமாம் !!

பசுமலையிலும் கானனால் சீர்குலைந்த பிரட்டன், நவாப்பிடம் ஐந்நூறு ஆட்டுக்கிடாயும், எழுபது கிடாக்கறியும், ஏழுவண்டி சாராயமும் கொடுத்தால் மதுரையினை எட்டு நாளைக்குள் பிடித்துத் தருவ தாகக் கூறினான். நவாப்பும் அவன் வேண்டியதை அவ்வாறே அளிக்கிறான். கோட்டையின் கீழமூலைக்கரைக்கு எதிரில் ஏழு "மோர்சா" (மேடு) உண்டாக்கி,

"ஏழு முன்னிருபத்தோரு பீரங்கியேற்றி"

கோட்டையைத்தாக்கி வீழ்த்தினான் பிரட்டன். கானே இரவோடிர வாக விழுந்த கோட்டைச் சுவரைப் புதுப்பித்துக் கொள்கிறான். பிரட்டனின் கடிதத்தொடர்பையும் கான் மறுத்து விடுகிறான்.

12:12 மீனாட்சி சந்நிதிக்கெதிரில் மேனாட்டார்க்கு வெற்றியில்லை

கோட்டையின் கீழ்மூலையில் என்ன முயற்சி செய்தும் பலன் பெறா நிலையில் பிரட்டன்

"மீனாட்சி சந்நிதிக்கெதிராம் — நமக்கு
செயமில்லை" என்று கூறி மேற்கு நோக்கி பசுமலை பக்கல் சென்று கோட்டையைத் தாக்க முனைகிறான்.

(தொடரும்)